தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF TAMIL EELAM

# செய்திக் கதிர்

தொலைபேசி இல : 43 58 11 42
செய்திச் சேவை இல : 46 36 49 49

தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரான்சுக் கிளை

16 - 6 - 1990


# புலிகள் இராணுவம் மோதல்

4891 31 18

## மன்னார்க் கோட்டை வீழ்ந்தது

யூன் 15

இலங்கை இராணுவம் நிலை கொண்டிருந்த மன்னார்க்கோட்டை புதன்கிழமை அன்று விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது. பல மணி நேரம் நடந்த சண்டையின் பின்னர் விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகக் கோட்டையினுள் நுளைந்தனர் எனக் கூறப்படுகிறது. டச்சுக் காரரால் கட்டப்பட்ட இக் கோட்டை இலங்கை இராணுவத்தின் மிக பந்தோபஸது நிறைந்த தளம் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இக் கோட்டையின் உச்சியில் விடுதலைப் புலிகளின் கொடி பறந்து கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மன்னாரில் சண்டையின் உக்கிரம் காரணமாக பொதுமக்கள் பலர் வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். கோட்டையைக் கைப்பற்றும் சண்டையின் போது ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டதாகவும் பல இராணுவத்தினர் கொல்லப் பட்டதாகவும் விடுதலைப் புலிகளின் மன்னார்ப் பிராந்தியப் பொறுப்பாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## நான்கு இராணுவ முகாம்கள் இருபதிற்கு மேற்பட்ட சிங்கள பொலிஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டன.

யூன் 15

கடந்த ஐந்து நாட்களாக இடம்பெற்று வரும் மோதல்களின் போது தமிழீழத்தில் உள்ள சிறீலங்காவின் முழு பொலிஸ் இராணுவ மையங்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. திருமலை அம்பாறை பகுதிகளில் அமைந்திருந்த நான்கு இராணுவ முகாம்களும் தமிழீழம் பூராவும் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சுமார் 700 பொலிஸாரும் இராணுவத்தினரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கிளிநொச்சி - இராணுவ முகாம் மீது தாக்குதல்

யூன் 14

கடந்த பல காலமாக கிளிநொச்சி பிரதேச மக்களின் அமைதியான வாழ்விற்கு மிகுந்த அச்சுறுத்தலாக இருந்த கிளிநொச்சி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலிற்கு உள்ளானது. இத் தாக்குதலின் போது முகாம் பலத்த சேதத்திற்கு உள்ளானது. ரீ.ஏ.க உட்பட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. தொடர்ந்தும் இம்முகாம் முற்றுகையின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலில் ஐந்து விடுதலைப் புலிகள் வீரமரணத்தை தழுவியுள்ளனர்.

## அடக்குமுறைக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

யூன் 14

"எமது ஒவ்வொரு நடவடிக்கைகளும் எமது மக்களின் பாதுகாப்புக்காகவும் தமிழீழ விடுதலைக்காகவும் அன்றி வேறில்லை" என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தொடரும் போர் தொடர்பாக விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது தொடரும் மோதல்கள் சிங்களப்படைகளின் தொடர்சியான ஆத்திரப்படுத்தலின் விளைவுகளே என சுட்டிக்காட்டிய அவ்வறிக்கை கடந்த 12.06.90 அன்று ஒரு போர்நிறுத்தத்தை செய்யப்போவதாக ஒருபுறம் அறிவித்த அரசு மறுபுறம் போரை தீவிரப்படுத்தியது என குற்றம் சாட்டியுள்ளது.

## சீனாவிடம் சிறீலங்கா வாங்கும் ஆயுதம்

ஈழநாதம் 01 . 06 . 1990

சீனாவிடம் இருந்து ரி . 56 ரக துப்பாக்கிகளை ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு வாங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்து அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.
இத்தகவலை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## கோட்டை முகாமிற்கு மேலதிக இராணுவம்

ஈழநாதம் 01 . 06 . 1990

கோட்டை இராணுவ முகாமிற்கு நேற்று புதிய விசேட படையினர் வந்திறங்கினர்கள். நேற்று யாழ்பகுதியின் மேலாக பல தடவைகள் கெலிகொப்டர் பறந்து சென்றதை யாழ்ப்பாண மக்கள் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதில் இரண்டாம் லெப்டினன் அமர சேகரா தலைமையில் புதிய ரெஜிமென்டைச் சேர்ந்த 100 இராணுவத்தினருக்கு மேல் கோட்டை முகாமிற்கு வந்திறங்கினர்கள். இவர்கள் கையில் எல் . எம் . ஜி ஏ . கே . 47 போன்ற ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் பல ஆயுதப் பொதிகள் கொண்டு சென்றதாகவும் அறியப்பட்டது. இவர்கள் அணிந்திருந்த தொப்பியில் சிங்கச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்ததாக அவதானித்த அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. இது பற்றி மேலும் அவ்வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் புதிய படைகள் வர இருப்பதாகவும் கூறின.

## அமைச்சர் சாகுல் கமீட் யாழ் விஜயம்.

யூன் 16

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் நேற்று அவசர பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுவிட்டு கொழும்பு திரும்பிய நீதி அமைச்சர் சாகுல் கமீட் இலங்கை ஜனதிபதியுடன் கலந்தாலோசனை செய்துவிட்டு மீண்டும் இன்று யாழ்ப்பாணம் சென்றுள்ளார். போர் நிறுத்தம் கோரச் சென்ற அமைச்சரிடம் இலங்கை அரசும் இலங்கை இராணுவமும் கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் சம்பந்தமான பிரேரணையை விடுதலைப் புலிகள் கையளித்தனர். அதனை ஜனதிபதி பிரேமதாசாவிடம் தெரிவித்து அவரது பதிலுடனே இன்று அமைச்சர் யாழ் சென்றுள்ளார்.

## கிழக்கிலங்கை பல்கலை

# பெயர்ப் பலகை

## தமிழில் அமைக்க தீர்மானம்!

ஏறாவூர், ஜூன் 7

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள பெயர்ப் பலகை தமிழிலும் அமைதல் வேண்டும்.

அத்துடன் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், செங்கலடி எனக் குறிப்பிடுவது நிறுத்தப்பட்டு செங்கலடிக்குப் பதிலாக வந்தாறுமூலை என குறிப்பிடப் பட வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை வந்தாறுமூலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் "சிற்றூர் அவை" தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி யிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது—

தற்போது பல்கலைக்கழகத்தின் பெயர்ப் பலகை ஆங்கில மொழியில் மட்டுமே அமைந்துள்ளது. ஆங்கில மொழியுடன் தமிழ் மொழியும் இடம்பெற வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது—

[ஜ-073]

மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில்

## சிறீலங்கா இராணுவம் விடுதலைப்புலிகள் மோதல்கள் ஆரம்பமாகின

யூன் 14.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கடந்த காலங்களில் பல தடவைகளில் மட்டக்களப்பு அம்பாறைப்பகுதிகளில் தமிழ்மக்கள் சிங்களப் பொலிசாராலும் இராணுவத்தினராலும் தாக்கப்பட்டு வந்தனர். இத்தகைய செயல்கள் விடுதலைப் புலிகளால் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் இச் செயல்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. மந்திகழி அம்பாறையில் சில சிங்களக் காடையர்கள் முஸ்லீம் மக்களை தாக்கி விட்டு பொலிஸ் நிலையத்துக்கு சென்ற போது பொலிசார் விடுதலைப் புலிகள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து சிறிய மோதல்கள் ஏற்பட்ட போதும் தமீழ விடுதலைப்புலிகளும் அரசும் பேசித் தீர்க்க முயன்றனர். ஆனால் மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து தான் தோன்றித்தனமான முறையில் இராணுவத்தினர் வெளியேறிய போதும் மீண்டும் மோதல்கள் ஏற்படத் தொடங்கியது. இருந்த போதிலும் அமைச்சர் கமீட் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விரைந்து விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு வார்த்தை நடாத்தி 12ந் திகதி மதியம் 12 மணிக்கு போர் நிறுத்தம் செய்வதாக உடன்பாடு செய்யப்பட்டது. ஆனால் இலங்கை அரசு இவ் ஒப்பந்தத்தை மீறி தனது தாக்குதலை உக்கிரப்படுத்தியது. இலங்கை விமானப்படையின் குண்டு வீசும் விமானங்கள் கெலிகொப்டர்களும் பொது மக்கள் வாழும் பகுதிகள் மீது தாக்குதலை நடாத்தத் தொடங்கியது. பெருந்தொகையான ராணுவத்தினரும் கொழும்பில் இருந்து கொண்டு சென்று இறக்கப்பட்டு தாக்குதலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இதே வேளையில் அம்பாறையில் நூறுக்கும் அதிகமான தமிழர்கள் சிங்களப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தும் மோதல்கள் பெரும் யுத்தமாக வடி வெடுத்துள்ளது.

## நெடுமாறன் தஞ்சாவூரில் கைது!

சென்னை,

தமிழர் தேசிய இயக்கத் தலைவரான பி. நெடுமாறன் நேற்று தஞ்சாவூரில் கைது செய்யப்பட்டார். அவரும், அவரது ஆதரவாளர்களும் ஊர்வலம் ஒன்றை நடத்திய போதே கைது செய்யப்பட்டனர்.

[illegible]

இந்த ஊர்வலத்துக்குப் போலீஸார் ஏற்கனவே தடை விதித்திருந்ததாலேயே இவர்கள் கைதானார்கள்.

வவுனியா சம்பவத்துக்கு முன்

## ராணுவ இடம்பெயர்வுகுறித்து புலிகள் தொலைபேசிமூலம் தெரிவித்தனர்

உதவி பொலிஸ் அதிபர் தகவல்

(கொழும்பு)

இராணுவ இடம்பெயர்வு தொடர்ந்து நடைபெற்றால் பிரச்சனைகள் உருவாகலாம் என்று இராணுவத்துக்கு எச்சரிக்கை செய்யும்படி, விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சம்பவ தினத்துக்கு முதல்நாள்தொலை பேசி மூலம் தன்னிடம் கூறிய தாக உதவிப் பொலிஸ் சுப் பிரிண்டன் திரு. மகேசன் தெரி வித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் கேட்டுக் கொண்டபடி, பொலிஸ் நிலையம் இத்தகவலை இராணுவத் திடம் தொடர்பு கொண்டு அறிவித்திருந்தது என்றும், இராணுவ இடம்பெயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தமைக்கான காரணங்கள் எதுவும் தனக்கு கூறப்படவில்லையென்றும் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் மகேசன் மேலும் தெரிவித்தார்.

## திருகோணமலையில் உக்கிரமான மோதல்கள்

(பிந்திய தகவல்கள்) யூன் 15.

திருகோணமலை மூதூர் பகுதிகளில் உக்கிரமான மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன. கிண்ணியா திரியாய் பகுதிகளில் அமைந்திருந்த இரு இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் விபரம் தருகின்றன. மேலும் மூதூர் பகுதியில் ஏழு இடங்களில் மோதல்கள் இடம்பெறுகின்றன. கடலோர கிராமங்கள் பீரங்கிப் படகுகளிலிருந்து சிறீலங்கா கடற்படையினரால் தாக்கப்படுகின்றன. நேற்றைய தினம் சங்கிலி, சுதன் ஆகிய இரு வேங்கைகள் வீரமரணம் அடைந்துள்ளனர். திருமலை மாவட்ட விடுதலைப்புலிகள் முன்னணி பொறுப்பாளர் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

## தமிழர் தேசிய இயக்கத்தின் தஞ்சை மாநாட்டுக்குத் தடை

சென்னை

தமிழரின் சுயநிர்ணய உரிமை என்ற தலைப்பில் தமிழர் தேசிய இயக்கம் தஞ்சாவூரில் நேற்று சனிக்கிழமையும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நடத்த இருந்த மாநாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தேசிய இயக்கத்தின் தலைவர் பி. நெடுமாறன் இந்த மாநாட்டை நடத்த இருந்தார். இந்த மாநாட்டுக்கு அனுமதி வழங்க வேண்டாமென்று மாநில அரசு தஞ்சை மாவட்ட அதிகாரிகளை பணித்திருக்கிறது.

மாநில உள்துறை செயலாளர் ஆர். நாகராஜன் இதுதொடர்பாக தெரிவிக்கையில் இரண்டு நாள் மாநாட்டுடன் கண்காட்சியும் ஏற்பாடாகி இருந்தது. இக் கண்காட்சியில் வைக்கப்பட இருந்த படங்கள் இலங்கை – இந்திய உறவைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன.

எனவேதான் கண்காட்சி மாநாட்டுக்கு தடை விதிக்கு மாறு மாவட்ட அதிகாரிகளுக்கு மாநில அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்றார்.

மாநாடு கண்காட்சி தொடர்பான விளம்பரங்கள், பதாகைகள் பொலிசாரால் அகற்றப்பட்டு வருவதாக அவர் மேலும் சொன்னார்.

---

பொலிஸ் முற்றுகை

---

இதேவேளை தஞ்சாவூர் நகரில் பொலிசார் தேசிய இயக்கத்தின் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த புகைப் படங்களை கைப்பற்றினார்கள்.

வியாழக்கிழமை பி. நெடுமாறன் இந்த புகைப்படக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கையில் நிலை கொண்ட இந்திய அமைதிப் படையினரை கண்டிப்பதாக இந்த புகைப் படங்கள் அமைந்திருந்தன. கண்காட்சி வரவேற்புக் கமிட்டியின் தலைவர் ஐயன்னாபுரம் முருகேசன், மதுரை மூர்த்தி ஆகியோர் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இந்து)

# எமது போராட்டம் எழுச்சியுடன் வீறுகொண்டுஎழவேண்டும் - மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

எமது விடுதலைப்போராட்டம் இனி வரும் காலத்திலே மிக எழுச்சியுடன் வீறுகொண்டு எழ வேண்டும் நாம் எமது போராட்டத்தில் இனி மேல்தான் பெரும் பாகத்தை கடக்க வேண்டும்.

என தியாகி சிவகுமாரனின் சிலையை திறந்து வைத்து உரையாற்றும்பொழுது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) தமிழீழ மக்களை வேண்டிக் கொண்டார்.

மேலும் தலைவர் மாத்தயா சிவகுமாரனின் போராட்ட வாழ்க்கை பற்றி நினைவு கூருகையில்,

1974ஆம் ஆண்டு இதே தினத்தில் எமது விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக இருந்து உயிர்த்தியாகம் செய்த அண்ணன் சிவகுமாரனை இந்த மண் ஒரு வீரனாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதுதான் இந்த மண்ணின் உணர்வு, இதுதான் இந்த மண்ணின் மகிமை என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் ஒரு போராட்டத்தை புரிந்து கொள்வதும் அந்த போராட்டத்தில் ஈடுபடும் போராளிகளை புரிந்து கொள்வதும் அவர்களது தலைமையை ஏற்றுக் கொள்வதும் இன்று இந்த மக்கள் அண்ணன் சிவகுமாரன் அவர்களுக்கு மீண்டும் சிலை எழுப்பியதன் மூலம் நிரூபித்து காட்டியுள்ளனர் என்றார்.

யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிஅரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் அவர்களின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பொறுப்பாளர் செல்வி பாரதி பேசும்போது எமது விடுதலைப் போராட்டத்தில் மாணவர் சாதித்தவை ஏராளம் இதேபோல அவர்கள் இன்னும் சாதிக்க வேண்டியவையும் ஏராளம் உள்ளது என்றார்.

மேலும்இக்கூட்டத்தில்தேவரண்ணா, கவிஞர் காசிஆனந்தன் உட்பட தியாகிசிவகுமாரனின் தாயும் உரையாற்றினார் இறுதியாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வலிகாமம் பொறுப்பாளர் ஆஞ்சநேயரின் நன்றியுரையுடன் முடிவடைந்தது (அ)

### விடுதலைப் புலிகளிடம் தோல்விகண்ட இராணுவம் அப்பாவி மக்கள் மீது பயங்கரவாதம்

யூன் 16

பல தோல்விகளைக் கண்டு வரும் இராணுவத்தினர் தமிழ்ப் பொது மக்கள் மீது தனது மிருக வெறித் தாக்குதலை நடத்தி வருகிறது.

13 . 06 . 90 அன்று தம்பலகாமம் ஜெயபுர வீதியில் 3 தமிழ் மக்கள் இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

14 .06 .90 அன்று திருமலை கொழும்பு வீதியில் 10 தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

திருமலையில் பல கடைகள் வீடுகளை ஆயுதப் படையினர் தீயிட்டுக் கொழுத்தி யுள்ளனர்.

மூதூரில் பீரங்கிப் படகுகளின் குண்டு வீச்சினால் 3 பொது மக்கள் மரணமாயினர். பல வீடுகள் சேதமடைந்தன. பல பொது மக்கள் காயம் அடைந்துள்ளனர். பல பொதுமக்கள் காயமடைந்தனர்.

இராணுவத்தினரின் பயங்கர நடவடிக்கைகளினால் கந்தளாய் பதவியனூறு 16 ம் கட்டை ஆகிய இடங்களில் இருந்து தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.வவுனியா மாவட்டத்தில் சிங்களக் கிராமங்களை அண்டிய பகுதியில் ஆயுதப் படையினரின் தாக்குதல் காரணமாக 300 தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

யாழ்நகரில் சில இடங்களில் கெலி கொப்டர்கள் மூலம் றொக்கட் மோட்டார் தாக்குதல் இடம் பெற்ற போது பொதுமக்கள் பலர் காயம் அடைந்தனர்.

# இலங்கைத் தமிழரின் பாதுகாப்பு புலிகளுடன் தொடர்புடையது - பாலகுமார்

(கொழும்பு)

இலங்கைத் தமிழரின் பாதுகாப்பு புலிகளுடன் தொடர்புடையது. புலிகள் ஆயுதம் தரித்திருப்பது தமிழ் மக்களுக்கு பலத்தைக் கொடுக்கின்றது. அரசுடன் அவர்கள் பேசும்போது பலமான நிலையில் இருந்துகொண்டு பேச்சுக்களை நடத்துகின்றார்கள். அவர்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் இலகுவில் ஏமாற்றி விட முடியாது. ஈழவர் ஜனநாயக மக்கள் முன்னணிச் செயலதிபர் திரு. பாலகுமார் கொழும்பில் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கும் மசோதாவிற்கு ஆதரவு அளிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேரம் பேசுகின்ற தென்றும், இத்திருத்தச் சட்டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வாக்களித்தால் வடக்கு-கிழக்கு மாகாணத்தையே மறந்துவிட வேண்டும் எனவும் தெரிவித்தார். ஆனால் முஸ்லிம் மக்களுக்கு சில பிரச்சினைகள் உண்டுதான் என்றாலும் அதற்கு இது தீர்வாகாது எனவும் தெரிவித்தார்,

மேலும் இவ் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு எதிரான தமிழ் குழுக்கள், முஸ்லிம் குழுக்கள் அனைவரும் துரோகிகள் என்றும். அவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தை கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது என்றும் தெரிவித்தார் மேலும் இத் திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு எதிராக சிங்களத் தலைவர் சிலர் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

# சிறீலங்கா அரசு திட்டமிட்டே மோதலை தொடங்கியது

புலிகள் குற்றச்சாட்டு

கடந்த மூன்று நாட்களாக நடந்து வரும் மோதல்கள் சிறீலங்கா அரசினால் திட்டமிட்டே தொடங்கப்பட்டுள்ளது. இவ்வாறு புலிகள் தரப்பில் கூறப்படுகின்றது. அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகளுடன் கடந்த ஒரு வருடமாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் போதே தனது இராணுவ தயார்படுத்தலை ஆரம்பித்துவிட்டது. ஜே.வி.பியின் தலைவர் றோகண விஜேயவீர இராணுவத்தினரால் கொல்லப்பட்ட பின் சிறீலங்கா அரசு இராணுவத்தில் தன்னை பலப்படுத்திக் கொண்டது. ஜே.வி.பியின் தலைவர் கொல்லப்படும்வரை ஜே.வி.பி யுடன் அரசு பேச்சுக்களை அமைச்சர் கமீட் மூலம் நடாத்தியவாறே இருந்தது. பேச்சுக்களை நடாத்தியவாறே இராணுவத்தை தயார் செய்யும் சிறீலங்காவின் போக்கு எமக்கு தெளிவாக தெரிந்ததே. அதே போலவே விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்திக்கொண்டே இராணுவ பலப்படுத்தலில் அரசு கவனம் செலுத்தியது.

சீனாவிலிருந்து ரீ.56 ரக ரைபிள்கள் உட்பட கனரக ஆயுதங்கள் பெருமளவு சிறீலங்கா அரசினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் பயிற்சிக்கென இராணுவத்தினர் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

மேலும் கிழக்கு மாகாணப் பகுதிகளில் புதிய இராணுவ முகாம்களும் குடியேற்றத்திட்ட முயற்சிகளும் இடம் பெற்று வருவதை விடுதலைப் புலிகள் பல தடவை பேச்சுவார்த்தைகளின் போது சுட்டிக் காட்டினர். திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் 3 இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளதை விடுதலை புலிகள் சுட்டிக்காட்டி எச்சரித்திருந்தனர்.

சில வாரங்களுக்கு முன்னர் சிறீலங்கா வேவு விமானங்கள் யாழ்ப்பாணம் உட்பட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளை, வேவு பார்த்ததையும் நான்கு குண்டுவீச்சு விமானங்கள் யாழ்ப்பாணத்தில் பறந்து திரிந்ததையும் விடுதலைப் புலிகள் கடுமையாக ஆட்சேபித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அவதானித்த விடுதலைப்புலிகள் தமிழீழ மக்களை சுயபாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுமாறு அறிவுறுத்தினர். மக்களோடு சேர்ந்து விடுதலைப் புலிகளின் மக்கள் அமைப்புகள் பதுங்கு குழிகளை அமைத்தும் காவலரண்களை அமைத்தும் வருகின்றன. இவை நாம் போருக்கு தயார் ஆகின்றோம் என்பதை விட மக்களை பாதுகாக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றோம் என்பதே உண்மையாகும்.

அதே வேளை விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தி வந்த சிறீலங்கா அரசு இந்திய இராணுவ வெளியேற்றத்துடன் மாகாணசபையை கலைத்து புதிய தேர்தல் நடாத்துவதற்கு பதிலாக அந்நடவடிக்கையை பின்போட்டு வந்தது. விடுதலைப் புலிகள் மாகாணசபையை கலைத்து புதிய தேர்தலை நடாத்துமாறு கோரியும் பலனளிக்கவில்லை.

மேலும் ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற மக்களால் விரட்டப்பட்ட கும்பல்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. மேலும் இக்குழுக்களுக்கு ஆயுதங்களும் வழங்கியும் பயிற்சியளித்தும் வருகின்றது. இத்தகைய செயல்கள் சிறீலங்கா அரசின் போர் நோக்கத்தை புலப்படுத்துகின்றது. எனவே இப்போது இடம்பெறும் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் திட்டமிடப்பட்ட முயற்சியே என்பதை காட்டுகின்றது.

# ஐம்பது விடுதலைப்புலிகள் வீரமரணம்
## தமிழீழம் தலை சாய்த்து அஞ்சலி

கடந்த ஐந்து நாட்களாக சிறீலங்கா இனவாத இராணுவத்திற்கெதிரான வீரமிகு தாக்குதல்களில் ஈடுபட்ட ஐம்பது வீரவேங்கைகள் வீரமரணத்தை தழுவியுள்ளனர். மரணித்த வீரமிகு அவ் ஐம்பது போராளிகளிற்கும் தமிழீழம் பூராவும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் மக்களுக்காக மறைந்த எம் போராளிகளிற்கு வீரவணக்கம் செலுத்தி சிறீலங்கா ஆயுதப்படைகளுக்கு எதிராக போராட உறுதி பூணுவோம் என பிரகடனம் செய்துள்ளனர்.

# அம்பாறையில் தமிழர்கள் வெட்டிப் படுகொலை

அம்பாறை மாவட்டம் சென்றல் காம் பகுதியில் அப்பாவித் தமிழ்மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர்

யூன் 13.

கடந்த 10ம் திகதியிலிருந்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடுமையான யுத்தம் நடைபெற்று வருகின்றது. அம்பாறையில் மத்தியில் அமைந்திருந்த இலங்கை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய பெருந்தொகையான இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சூழ இருந்த கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து வீடுகளுக்குள் இருந்த பொதுமக்களை பெண்கள் குழந்தைகள் உட்பட நூற்றியிருபதுக்கும் அதிகமானவர்களை வெட்டிக் கொன்றுள்ளனர். இப்படுகொலையைத் தொடர்ந்து இப்படுகொலைக்கு பழிவாங்கும்முகமாக மிக உக்கிரமான யுத்தத்தை விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தின் மீது தொடுத்துள்ளனர். மேலும் அம்பாறையில் இருந்த பிள்ளையார் கோவிலை இலங்கை இராணுவத்தினர் வெடிமருந்து வைத்து தகர்த்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் ஏராளமான பெண்கள் இலங்கை இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டுள்ளனர்.



# ஏழு இராணுவமுகாம்கள் இருபத்தைந்து பொலிஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த பத்தாம் திகதி ஆரம்பித்த மோதல்களில் இதுவரை இருபத்தைந்து பொலிஸ் நிலையங்களையும் இரு இராணுவ முகாம்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர் எனவும் எண்ணூறு பொலிசாரும் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்துள்ளனர் எனவும் சர்வ தேச செய்தி நிறுவனம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது. இன்று கிடைக்கப்பெற்ற செய்திகளின் படி வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து யுத்தம் இடம்பெற்று வருவதாக அறியப் படுகின்றது. இன்று காலை வரை இடம் பெற்ற யுத்தத்தில் ஏழு இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன . ஏராளமான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இன்னும் பல முகாம்கள் விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப் பட்டு தாக்கப்படுகின்றன. கல்முனை கல்குடா பகுதிகளில் அமைந்திருந்த இலங்கை இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் நவீன பாணித் தாக்குதலுக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் முகாம்களை விட்டு தப்பி ஓடிவிட்டனர். அதன்பின் அவ்விரு இராணுவ முகாம்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். அம் முகாம்களில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து பிரிகேடியர் கொப்பேகடுவ தலைமையில் மூவாயிரத்துக்குமதிகமான இராணுவத்தினர் மட்டக்களப்பு நோக்கி நகர்த்தப்பட்டுள்ளனர். பிரிகேடியர் கொப்பேகடுவ 1987 ம் ஆண்டு வடமராச்சி தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எண்ணூறு பொலிசாரும் இராணுவத்தினரும் சரண்.

## ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன.

